ஊக்கத்தொகையாக மட்டும் வழங்கிய அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகள் நலன் கருதி, அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளின் தேவைகளுக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்படும் என்பதனைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் திருவள்ளூர் மாவட்டம், விவசாயிகள் அதிகம் இருக்கக்கூடிய மாவட்டம். அதிலும் குறிப்பாக, திருவள்ளூர் தொகுதி, விவசாய நிலங்கள் அதிகமாக இருக்கக்கூடிய ஒரு சட்டமன்றத் தொகுதியாகும். அங்கு நெல் கொள்முதல் மையம் ஒன்றை அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

கால்நடை மருந்தகம்

***6058—திருமதி ப. மனோன்மணி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2020 ஜனவரி 8]

(அ) வீரபாண்டி தொகுதி, வீரபாண்டி ஒன்றியம், மாரமங்கலத்துப்பட்டியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வீரபாண்டி தொகுதி, வீரபாண்டி ஒன்றியம், மாரமங்கலத்துப்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள் 3,605 உள்ளதால், மாரமங்கலத்துப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டவாறு, நேரடியாக கால்நடை மருந்தகம் துவக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அரசின் கொள்கை முடிவின்படி, புதிய கால்நடைக் கிளை நிலையங்கள் துவங்கும் திட்டம் இடம்பெறும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி அவர்கள்.*

திருமதி ப. மனோன்மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மக்களின் தலைவர், தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். அனைவருக்கும் எனது புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–20

எனது வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாரமங்கலத்துப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத்தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது கவனத்திற்கு

எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்ததற்கு மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதிக்குட்பட்ட S.S. பாப்பாரப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துக் கொடுக்க அனுமதி அளித்தமைக்காக என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது வீரபாண்டி தொகுதிக்குட்பட்ட புத்தூர், பாரப்பட்டி ஆகிய பகுதிகளில் கால்நடைக் கிளை நிலையங்கள் அமைத்துத் தருவதற்கு ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் விலையில்லா ஆடுகள் மற்றும் கறவைப் பசுக்களை அதிகப்படியாக வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புத்தூர் அக்ரஹாரம் மற்றும் பாரப்பட்டி ஊராட்சிப் பகுதிகளில் கால்நடைக் கிளை நிலையம் வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதிகளில் இருக்கின்ற கால்நடைகளின் எண்ணிக்கைக்கேற்ப, நமது இணை இயக்குநரின் பரிந்துரைக்கேற்ப, தேவைப்படுமாயின், அப்பகுதிகளில் கால்நடைக் கிளை நிலையங்கள் அமைப்பதற்கு பரிசீலனைசெய்யப்படும்என்பதைமுதலில்தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், விலையில்லா ஆடுகள் மற்றும் கறவைப் பசுக்களை அதிகமாக வழங்கவேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். குறிப்பாக, அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் மூலமாக இந்த ஆண்டு வீரபாண்டி தொகுதிக்குட்பட்ட மூடுதுறையில் 52 பயனாளிகளுக்கும், மாரமங்கலத்துப்பட்டியில் 265 பயனாளிகளுக்கும், கீரபாப்பம்பட்டியில் 144 பயனாளிகளுக்கும்,

2020 ஜனவரி 8]

மருளையர்பாளையத்தில் 45 பயனாளிகளுக்கும், நெய்க்காரப்பட்டியில் 330 பயனாளிகளுக்கும் மற்றும் நாலிக்கல்பட்டியில் 302 பயனாளிகளுக்கும், ஒரு பெண் பயனாளிக்கு தலா 4 ஆடுகள்வீதம், மொத்தம் ரூபாய் 1 கோடியே 47 இலட்சத்து 26 ஆயிரம் செலவில் இலவசமாக ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விலையில்லா கறவைப் பசுக்கள் இன்னும் அதிகமாக வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்போது, வீரபாண்டி தொகுதி மக்களுக்கும் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி அவர்கள்.*

திருமதி ப. மனோன்மணி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லாசியுடன் கால்நடைகளுக்கென* Ambulance *சேவையைத் துவக்கி வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

சேலம் தெற்கு தொகுதி, நகர்ப்புறத்தில் அமைந்திருந்தாலும்கூட, கிராமப்புறங்களை ஒட்டியிருக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், சேலம் தெற்கு தொகுதிக்குட்பட்ட அம்மாப்பேட்டை மண்டலம், 37—வது கோட்டத்தில் செல்வநகரில்

ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இந்தப் பகுதியைச் சுற்றியுள்ள உடையாப்பட்டி, அயோத்தியாபட்டணம், வரகம்பாடி மற்றும் வீராணம் உள்ளிட்ட பகுதிகளில் கால்நடை வளர்ப்போரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அரசு வழங்கக்கூடிய விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் இன்றையதினம் கால்நடைகளின் எண்ணிக்கையும், உற்பத்தியும் அதிகரித்திருக்கின்ற காரணத்தினால், அவற்றிற்குத் தேவையான சிகிச்சையை விரைவாகவும், துரிதமாகவும் ஏற்படுத்திக்கொடுக்கும்பொருட்டு செல்வநகரில் ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா என்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேலம் தெற்கு தொகுதி, அம்மாப்பேட்டையில் 37–வது கோட்டம், செல்வநகரில் கால்நடைக் கிளை நிலையம் வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்றால் பல்வேறு அரசு விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அவற்றில், புதிய கால்நடைக் கிளை நிலையம் தோற்றுவிக்க கால்நடை அலகுகள் குறைந்தது 3000–க்குமேல் இருக்க வேண்டும். கால்நடைக் கிளை நிலையங்களுக்கு இடைப்பட்ட தூரம் 3 கி.மீ.–க்கு மேல் இருத்தல் வேண்டும். கால்நடைக் கிளை நிலையம் செயல்படுவதற்கு வாடகையில்லாக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும். ஒரு கால்நடைக் கிளை நிலையம் தோற்றுவிக்க முதலாம் ஆண்டிற்கு ரூ.2.97 இலட்சம் ரூபாய் தேவைப்படும், அதன் பிறகு ஆண்டுக்கு ரூ.2.47 இலட்சம் நிதி தொடர் செலவினங்களுக்குத் தேவைப்படும். ஆகவே, இந்த விதிமுறைகள் எல்லாம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்அவர்கள்கோரியபகுதியில்பூர்த்திசெய்யப்படுமேயானால், சட்டமன்ற உறுப்பினர் கோரியவாறு அரசின் பரிசீலனைக்குக் கொண்டு சென்று, ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.